**Election Commission, Canada**
**Transnational Government of Tamil Eelam**
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்
தேர்தல் ஆணையம், கனடா

**B28-80 Nashdene Rd**
**Scarborough, ON, M1V 5E4**

vkanapat@gmail.com
416-844-7390

நவம்பர் 11, 2014

## ஊடக அறிக்கை 1(2014)

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை உறுப்பினர் வெற்றிடங்களுக்கான இடைத்தேர்தல் - 2014

சர்வதேச அங்கீகாரத்துடன் சுதந்திரமும் இறைமையும் உள்ள தமிழீழம் மலர்வதற்கென உருவாக்கப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதன் மூலம் அதன் இலக்கை அடைவதில் பங்கு கொள்ளும் ஆர்வத்துடன் முன்வந்தவர்களே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அங்கத்தவர்கள்.

கனடா, மேற்குப் பிராந்தியம், சஸ்கச்சுவானின் பிரதிநிதியும், மத்திய பிராந்தியம், தேர்தல் தொகுதி 12இன் பிரதிநிதியும் தனிப்பட்ட காரணங்களுக்காகத் தமது பதவிகளைத் துறந்திருக்கிறார்கள்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையில் ஏற்பட்டிருக்கும் இவ்விரு வெற்றிடங்களையும் இட்டு நிரப்புவதற்கான உபதேர்தலை நடத்துவதற்கான பொறுப்பு நாடு கடந்த அரசாங்கத்தின் தேர்தல் ஆணையத்தைச் சார்ந்தது. குறிக்கோளை முன் எடுத்துச் செல்வதற்குத் தமிழ் மக்கள் அனைவரும் தம் உதவிக்கரம் நீட்டித் தமது கடமையைச் செய்வார்கள் என்று தேர்தல் ஆணையம் எதிர்பார்க்கிறது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்றத்தில் தம்மை இணைத்துக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களிடமிருந்து வேட்பு மனுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆணையத்துடன் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள், நவம்பர் 25, 2014, செவ்வாய்க் கிழமை பிற்பகல் 5.00 மணியாகும்.**

**வர்ணகுமாரன் கணபதிப்பிள்ளை**

கனடாத் தேர்தல் ஆணையாளர்
நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

**தொடர்புகளுக்கு:** வர்ணா: 416-844-7390, திருமதி. ஶ்ரீதாஸ்: 416-756-4607.